Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 41/2019**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஆனந்தராஜ் | ஜாதி | : |
| த/பெ | : | தொழில் | : முதுநிலை கண்காணிப்பாளர், |
| மண்டல | | | மண்டல பாஸ்போர்ட் அலுவலகம், மதுரை. |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.03.2024

(Accused A1, A2 present.)

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் முதுநிலை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தின் போது மேற்கண்ட மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் முதுநிலை கண்காணிப்பாளராக இருந்த ராஜேஸ்வரி என்பவர் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்ட நிலையில் ஆவணங்களை பார்வையிட்டு அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் அவருடன் சேர்ந்து பணியாற்றியுள்ளேன். அவரது கையொப்பம் எனக்கு தெரியும். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். திண்டுக்கல் பேகம்பூரை சேர்ந்த முகமது கனி என்பவரது மகன் நிஷாத் என்பவர் எங்களது மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் புது பாஸ்போர்ட் பெறுவதற்காக 05.06.2015 அன்று விண்ணப்பித்தார். விண்ணப்பிக்கும்போது பிறந்த தேதிக்கு ஆதாரமாக பிறப்பு சான்றிதழ் சமர்ப்பித்தார். பிறப்பு சான்றிதழின் உண்மை தன்மை குறித்து அறிவதற்காக சின்னாளபட்டி சார்பதிவாளருக்கு கடிதம் மூலம் பிறப்பு சான்றிதழின் நகலை இணைத்து உண்மை தன்மை சரிபார்க்கப்பட்டது. அதில் மேற்கண்ட பிறப்பு சான்றிதழ் போலியானது என்று சின்னாளபட்டி சார்பதிவாளர் கடித எண்.1696/2015 நாள் 17.07.2015 அன்று கடிதம் வழங்கினார். இதனை அடிப்படையாக கொண்டு திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் படி மண்டல பாஸ்போர்ட் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து புகார் மனு அனுப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனு எங்களது அலுவலகத்தில் இருந்து முதுநிலை கண்காணிப்பாளரால் அனுப்பப்பட்டது ஆகும். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

Sd/.P.Jaisankar
District Munif Cum Judicial Magistrate,
Athoor.